விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 24 ஞாயிற்றுக்கிழமை (10.12.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 346

ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சிமெந்து

# வாகரை நோக்கி ஷெல் தாக்குதல்

# குழந்தை உட்பட 15 பேர் உயிரிழப்பு

## காயமடைந்தவர்களை மட்டக்களப்புக்குக் கொண்டு செல்ல இராணுவம் அனுமதி மறுப்பதாகத் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

வாகரைப் பகுதியை' நோக்கி நேற்று மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலில் குழந்தை உட்பட 15-ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

50-ற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். திருகோணமலையிலிருந்து இடம் பெயர்ந்து வாகரை நலன் புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்களே எறிகணைத் தாக்குதலுக்கு இலக்கானதாக தெரிவிக்கப்பட்டது. காயமடைந்தவர்களை மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு மருத்துவமனைக்கு கொண்டு செல்வதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. ( 04 ஆம் பக்கம் பார்க்க)

## மோதல்களை கண்காணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது

### க.கா.குழு கவலை தெரிவிப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் இடம் பெறும் மோதல்களை கண்காணிப்பதற்கு தடை ஏற்பட்டுள்ளதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

சேருகம பிரதேசத்திலும் பாடசாலை மற்றும் தாக்குதலுக்குள்ளான கிராமங்களை பார்வையிடுவதற்கு அங்கு தற்போது காணப்படும் சூழல் ஏதுவானதாக இல்லை என கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தெ பினூர் ஓமர்சன் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரதேசங்களில் மோதல் ஓய்ந்த பின்னர் பிரதேசங்களை பார்வையிடவுள்ள தாகவும் அவர் (04 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவில் இருந்து அத்தியாவசியப் பொருட்கள்

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டிற்கான அத்தியாவசிய உணவுப் பொருட்களை இந்தியாவில் இருந்து தருவிப்பதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

தற்போது தமிழ் நாட்டில் உள்ள துறைமுகத்தில் தரித்துள்ள கப்பலில் 10 ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருட்கள் ஏற்றப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வாரம் (04 ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலை மகிந்தபுரத்தில் மோதல் 30 படையினர் பலியென புலிகள் தெரிவிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மகிந்தபுரவிலிருந்து அரச படையினர் மேற்கொண்ட பெரும் எடுப்பிலான நகர்வு தங்களால் முறியடிக்கப்பட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

இம் முறியடிப்புச் சமரில் 30 இற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதுடன் 100 இற்கும் மேற்பட்ட படையினர் படுகாயமடைந்துள்ளனர் என புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை படையினரின் ஆட்லறிப் பீரங்கி ஒன்றும் தகர்த்து அழிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. ஈச்சிலம்பற்று பகுதியை நோக்கிய பெரும் எடுப்பிலான இப் படைநகர்வு மகிந்தபுர மற்றும் கல்லாறுப் படை முகாம்களில் இருந்து நேற்றுக் காலை 5.30 மணி முதல் மேற் கொள்ளப்பட்டதாக தெரியவருகிறது.

ஈச்சிலம்பற்றுப் பகுதியில் இரண்டரைக் கிலோ மீற்றர் தொலைவுவரை ஆக்கிரமித்த இப் படையினருக்கு எதிராக விடுதலைப்புலிகள் எதிர்த் தாக்குதலை நடத்தினர்.

எதிர்த் தாக்குதலையடுத்து மாலை அளவில் படையினர் அவர்களின் பழைய நிலைக்கு திரும்பியதாக விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் (04 ஆம் பக்கம் பார்க்க)

## சரசாலை கிழக்கில் சிறுவன் சுட்டுக்கொலை

சரசாலை கிழக்கு சாவகச்சேரியில் நேற்று முன்தினமிரவு சிறுவன் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். பிரஸ்தாப சிறுவன் வீட்டில் இருந்தபோது அங்கு சென்று ஆயுததாரிகள் அவரை வெளியே அழைத்து சுட்டதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மனோகரன் பரந்தாமன் (வயது 17) என்ற சிறுவனே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். இவரது சடலம் நேற்று மதியம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-5,43)

## இலங்கைக்கு வெடிபொருட்கள் முதல்வர் கருணாநிதி கண்டனம்



(சென்னை)

தூத்துக்குடி துறைமுகம் வழியாக இலங்கைக்கு வெடி பொருட்கள் அனுப்பப்பட்டதற்கு தமிழக முதல்வர் கருணாநிதி எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இந்த விவகாரம் தொடர்பாக புதுடில்லி மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனியிடம் நேற்று கருணாநிதி நேரில் கண்டனம் தெரிவித்தார்.

அப் போது வெடிபொருள்கள் அனுப்ப அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை என்றும் எனினும் அது தொடர்பாக விசாரிக்க உத்தரவிடுவதாகவும் கருணாநிதியிடம் அந்தோனி உறுதியளித்தார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## காயமடைந்த சிப்பாய் நேற்று உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை இலக்கு வைத்து நடாத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் காயமடைந்த இராணுவ சிப்பாய் நேற்று உயிரிழந்தார்.

குண்டுத் தாக்குதலில் காயமடைந்த சிப்பாய் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

எனினும் (04 ஆம் பக்கம் பார்க்க)



## அரசாங்கத்தின் யோசனைகளுக்கு புலிகள் உடன் பதிலளிக்க வேண்டும்

### பாலித கோஹன்ன கோரிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணம் மற்றும் வாகரைப் பகுதிகளுக்கு அத்தியாவசிப் பொருட்களைக் கொண்டுசெல்வது ;அதற்கு பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகளுக்கு உடனடியாக விடுதலைப்புலிகள் பதிலளிக்க வேண்டுமென்று அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கோஹன்ன தெரிவித்துள்ளார். இது குறித்து கலந்துரையாட அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## வட்டுக்கோட்டையில் நேற்று குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(பொன்னாலை)

வட்டுக்கோட்டை திக்கராய் குளம் வயல் வெளிப்பகுதியில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அராலி மேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 6 பிள்ளைகளின் தந்தையான செல்லையா திபாகரன் (வயது 57) என்ற மீன் வியாபாரியே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். இவர் தொழில் நிமித்தம் சென்றுகொண்டிருந்த போதே சுடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச-9,49)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## யாழ்.லயன்ஸ் கழக ஏற்பாட்டில் சிக்கின்குனியா விழிப்புணர்வு நிகழ்வும் இலவச மருத்துவ முகாமும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் கொக்குவில் மேற்கு ஞானபண்டித வித்தியாலயத்தில் இன்று காலை 9.30 மணிக்கு சிக்கின்குனியா பற்றிய விழிப்புணர்வு நிகழ்வும் இலவச மருத்துவ முகாமும் நடைபெறவுள்ளதாக அதன் தலைவர் டி.எஸ்.லெனாட் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் யாழ்.போதனா வைத்திய சாலை சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். பாலசுப்பிரமணியம், சிக்கின்குனியா பற்றிய விழிப்புணர்வுக் கருத்துக்களையும் அதனை தவிர்ப்பதற்கான வழிமுறைகள் பற்றிய கருத்துக்களும் வழங்கப்படவுள்ளன.

தொடர்ந்து இந்த முகாமில் சிக்கின்குனியாவால் பீடிக்கப்பட்டவர்களைப் பரிசோதித்து அவர்களுக்கு இலவச மருத்துவமும் வழங்கப்படவுள்ளது.

இத்துடன் உயர் குருதி அழுத்தப் பரிசோதனை, நீரிழிவு மற்றும் கண் பரிசோதனை, பொது மருத்துவம் ஆகியனவும் நடைபெறவுள்ளது.

எனவே மேற்படி நோயினால் பாதிக்கப்பட்ட மக்கள் இந்தச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி பயன்பெறுமாறு தலைவர் கேட்டுள்ளார். (எ-134)

## அரச திணைக்களங்களுக்கு தமிழ் அதிகாரிகளை நியமிக்க உத்தரவு

ஓய்வூதிய திணைக்களம் உள்ளிட்ட பல அரச திணைக்களங்களுக்கு தமிழ் அதிகாரிகளை உடனடியாக நியமிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க உரிய அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

தமிழ் மொழி அதிகாரி ஒருவரின் தேவை தற்போது அத்தியாவசியமாகியுள்ளதாகவும் அதற்கான நடவடிக்கையில் உடனடியாக ஈடுபடுமாறும் அரச நிர்வாகம் மற்றும் தாய் நாட்டு நடவடிக்கைக்கான அமைச்சின் செயலாளர் அரசியமைப்பு நடவடிக்கை மற்றும் தேசிய ஒன்றுணைப்புக்கான அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு அறிவித்துள்ளார்.

கடந்த மாதம் 30 ஆம் திகதி மேற்படி செயலாளர்களுக்கு கடிதங்கள் மூலம் அறிவித்துள்ள ஜனாதிபதியின் செயலாளர் அரச திணைக்களங்களுக்கு வருகை தரும் தமிழ் மக்கள் தமதுதேவையை நிறைவேற்றிக் கொள்ள பெரும் சிரமங்களுக்கு உள்ளாவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

### யூரியா விநியோகம்

காலபோக நெற் பயிர்ச் செய்கைகளுக்கான மானிய உரம் (யூரியா) இன்று காலை புலோலி அம்பன் கமநல சே[illegible]வ நிலையத்தில் விநியோகிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-133)

## செஞ்சிலுவைச் சங்க ஊழியர் உட்பட 10 பேர் மட்டக்களப்பில் கடத்தல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு தனியார் பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்க ஊழியர்உட்பட பத்து இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பிலிருந்து நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் புறப்பட்ட தனியார் பேருந்து செங்கலடியைச் சென்றடைந்த போது அப்பிரதேசத்தில் பஸ்ஸை வழிமறித்து 18-30 வயதுக்கிடைப்பட்ட இளைஞர்களை இறக்கி கடத்திச் சென்றதாக முறையிடப்பட்டுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையின் செஞ்சோலைச் சங்க கட்டடத் திணைக்களத்தில் தொழில் நுட்ப அதிகாரியாகக் கடமையாற்றும் சர்வன் (வயது-26) என்பவரே கடத்திச் செல்லப்பட்டவர்களில் ஒருவராவார்.

கடத்தப்பட்டவர்கள் 15-20 வயதுக்கிடைப்பட்டவர்கள் என்று பேருந்தில் பயணித்த பயணிகள் தெரிவித்துள்ளனர். செங்கலடிப் பிரதேசத்தில் இதுவரை 100ற்கும் மேற்பட்ட இளைஞர்கள் கடத்தப்பட்டுள்ள நிலையில் முதற்தடவையாக பட்டப்பகலில் பஸ் வழிமறிக்கப்பட்டு 10 இளைஞர்கள் கடத்தப்பட்ட சம்பவம் அப்பகுதி மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. (ச-5)

## ஸ்கொட்லன்ட் யார்ட் பொலிஸ் அடுத்தவாரம் இலங்கை வரும்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு ஸ்கொட்லன்ட் யார்ட் பொலிஸ் குழு ஒன்று அடுத்த வாரங்களுக்குள் இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

அவர்களின் வருகைக்கு தேவையான அடிப்படை நடவடிக்கைகள் தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளன. எனினும் இக் குழுவில் அடங்குபவர்கள் மற்றும் அவர்கள் வருகை தரும் தினம் பற்றிய சரியான தகவல்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளிற்கிணங்க ஸ்கொட்லன்ட் யார்ட் பொலிஸ் குழு இலங்கை வரவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீதான தற்கொலைத் தாக்குதலில் ஈடுபட்டவருக்கு போலியான அடையாள அட்டையை வழங்கிய சந்தேகத்தின் பேரில் ஆட்பதிவுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் விஜய ரணசிங்க நேற்று ரகசியப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏற்கனவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது தற்கொலைத் தாக்குதலை நடத்தியவருக்கு போலி அடையாள அட்டையை வழங்கிய குற்றச்சாட்டின் பேரிலும் விஜய ரணசிங்க கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-9,133)

## குடும்பஸ்தர் கடத்தப்பட்டார்

(வவுனியா)

எக்ஸ்ரா ரவல்ஸ் அன்ட் ரூரிஸ் நிறுவனத்தின் உரிமையாளர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை 5.30 மணியளவில் இவர் கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் உரிமையாளரான அருண சிவாஜி சிறிசங்கர் என்பவரே கடத்தப்பட்டவராவார். இது தொடர்பாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ச-132)

## கூட்டுறவுத்துறை சேவையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க அரசு நடவடிக்கை

(கொழும்பு)

2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் கூட்டுறவுத் துறை சேவையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மாதம் இவ்வூதியர்கள் 5 ஆயிரம் ரூபாவை ஓய்வூதியப் பணமாக பெற்றுக் கொள்வார்கள். எனவே எதிர்காலத்தில் கூட்டுறவுத் துறை புதுப்பொலிவுடன் மக்களுக்குச் சிறந்த சேவை வழங்கும் வகையில் சிறப்புடன் திகழ சேவையாளர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டுமென மத்திய மாகாண கூட்டுறவுத் துறை அமைச்சர் எதிரி வீர வீரவர்தன தெரிவித்தார்.

கண்டி முகவெலவில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்தில் கூட்டுறவுத் துறை பிரநிதிகள் குழுவினரைச் சந்தித்து உரையாடியபோதே மத்தியமாகாண கூட்டுறவுத் துறை அமைச்சர் எதிரி வீர வீரவர்தன இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டுறவுச்சங்கக் கடைகள் எப்பொழுதும் சீனி, மா , அரிசி, பருப்பு, கருவாடு, ரின் மீன்களை மாத்திரம் விற்கும் நிலையமாக இருக்கக் கூடாது.

காலத்துக்கேற்ற வகையில் மக்களுக்குத் தேவையான சகலவற்றையும்சிறந்த முறையில் பெற்றுக் கொடுக்கும் நிலையமாக விளங்க வேண்டும். ஊழியர்கள் அர்ப்பணிப்புடனும் உண்மையாகவும் சேவையாற்றும் பட்சத்தில் திறந்த பொருளாதாரத்தைப் பற்றி நாம் கவலையடைய வேண்டியதில்லை என்றார். (ச)

## கோதுமை மாவுக்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கோதுமை மாவுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இம்முறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களூடாக 6 ஆம் கட்ட உணவு விநியோகத்தின் போது கோதுமை மா விநியோகிக்கப்படாமையினால் இத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

போதியளவு கோதுமை மா கப்பல் மூலம் கொண்டு வராமையே குடாநாட்டில் மாவுக்குப் பெரும் கேள்வி எழுந்தமைக்குக் காரணமாகும்.

மாவுக்குப் பதிலாக இம்முறை உணவு விநியோகத்தின்போது அரிசி கூடுதலாக விநியோகிக்கப்பட்டுள்ளது. கோதுமை மா போதிளவு கையிருப்பில் இல்லாத காரணத்தினால் அது வழங்கப்படவில்லை என பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமைத்துவம் தெரிவிக்கின்றது. (ச-5)

## பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

ஏற்கனவே எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறுமென்று திட்டமிட்டிருந்த ஆங்கில அடிப்படைத் திறன் விருத்திக்கான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 13 ஆம் திகதி புதன் கிழமை நடைபெறவுள்ளது.

எனவே எல்லோரும் காலை 8.30 மணிக்கு கலாசாலையில் சமுகமளிக்குமாறு பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் கேட்டுள்ளார். (ச-9)

## க.பொ.த.(சா/தர) பரீட்சையை வாகரையில் ஒத்திவைக்க கோரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை சம்பூர்ப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மாணவர்களுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை ஒத்திவைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வாகரையில் மாத்திரம் அங்குள்ள 297 மாணவர்களும் திருகோணமலையிலிருந்து வெளியேறிய 300 மாணவர்களும் கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சைக்கு இம்முறை தோற்றத் தகுதி பெற்றிருக்கின்றார்கள்.

எனினும் அவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதுவித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை. அதேநேரம் குறித்த மாணவர்கள் பரீட்சையில் தோற்றும் மன நிலையில் இல்லை என பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

எனவே இந்த மாணவர்களுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை ஒத்திவைக்குமாறு பெற்றோரும் நலன் விரும்பிகளும் கோரிக்கை விடுத்துள்ளார்கள். (ச-133)

## கவிஞர் வில்வரத்தினம் நேற்றுக் காலமானார்

(திருகோணமலை)

ஈழத்தின் புகழ் மிக்க கவிஞர்களில் ஒருவரான கவிஞர் சு.வில்வரத்தினம்(வயது-56) நேற்று கொழும்பில் காலமானார்.

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட கவிஞர் சு.வில்வரத்தினம் இடம்பெயர்ந்து 1991 ஆம் ஆண்டுமுதல் திருகோணமலையில் வாழ்ந்து வந்தார்.

தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்டத்தில் உறுதியான பற்றுக் கொண்ட கவிஞரான இவர் தனது கவிதைகளில் அதற்கே முதன்மை இடத்தை வழங்கி வந்தார். (எ-1)

## அகதிகளுக்கான கதவு திறந்திருக்கின்றது பிரித்தானிய அரசாங்கம் அறிவிப்பு

(லண்டன்)

பிரித்தானியா அரசாங்கம் தனது அகதிகள் வெள்ளைப் பட்டியலில் இருந்து இலங்கையை நீக்கவுள்ளது. இலங்கையில் தற்போது நிலைமை மோசமடைந்துள்ளதை அடுத்து 2002 ஆம் ஆண்டின் குடியுரிமை, குடியேற்றம், அகதிகள் சட்டத்தின்படி வெள்ளைப் பட்டியலிலுள்ள நாடுகள் பட்டியலில் இருந்து இலங்கையை நீக்க பிரித்தானிய நாடாளுமன்றம் முடிபெடுத்துள்ளது.

எனினும் தனிப்பட்டவர்கள் அடிப்படையிலேயே அகதி தகுதி வழங்கப்படும். ஒவ்வொருவரின் தகுதியும் ஆராயப்படும். அவர் உண்மையாகவே பாதிக்கப்பட்டவரா? அவருக்குப் பாதுகாப்புத்தேவைப்படுகின்றதா? என்பது ஆராயப்பட்ட பின்னரே அவருக்கு அகதித் தகுதி வழங்கப்படும் என்று உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்தான பின்னர் 2003 ஆம் ஆண்டு அதன் வெள்ளைப் பட்டியல் நாடுகள் பட்டியலில் இலங்கையை பிரித்தானியா சேர்த்து அதிலிருந்து அகதிகளுக்கு கதவுகள் அடைக்கப்பட்டிருந்தன.

தற்போது இலங்கை நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளதையடுத்து அகதிகளுக்கு இடமளிக்க பிரித்தானியா முடிபெடுத்துள்ளது. (எ-1)

## சவர்க்கார வகைகளுக்கு யாழில் பெருந்தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் சவர்க்கார வகைகள் மற்றும் சம்போ வகைகளுக்கு பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். சன்லைட் மற்றும் லக்ஸ் வகைகள் 120 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

எனினும் அவற்றைப் பெறுவதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதைவிட சலவைத் தூள்களும் யாழ்ப்பாணத்தில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. சேவ்எக்ஷல் சிறிய பைக்கெற் 30 ரூபாவுக்கும் சம்போ 15 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

சவர்க்காரம் மற்றும் சலவைத் தூள்களுக்கு கட்டுப்பாட்டு விலையை அமுல்படுத்தப்படாவிட்டால் காலப்போக்கில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படும் என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ச)

## குறைகேள் அரங்கம்

### கூட்டுறவுக்கு மட்டுந்தானா?

இடர் காலம், அத்தியாவசிய சேவை என்பன கூட்டுறவுக்கு மட்டுந்தானா? அதுவும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, நுகர்ச்சிக் கிளைகளுக்கு மட்டுந்தானா? கிளைமுகாமையாளர்களும் உதவியாளர்களும் மட்டுந்தானா நேரகாலம் பாராது சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை, மதிய போசன இடைவேளை நேரம் பாராது சேவையாற்ற வேண்டும்.

கூட்டுறவுச் சங்க அலுவலர்கள் அதிலும் குறிப்பாக வெளிக்கள உத்தியோகஸ்தர்களும் இவ்வாறுதான் செயல்படுகின்றார்கள். களஞ்சியப் பொறுப்பாளர், உதவியாளர்கள், வாகனச் சாரதிகள், சுத்திகரிப்பாளர்கள் எந்த நேரமும் ஒன்றில் கொள்வனவு அல்லது விநியோகத்திலேயே முழுநேரத்தையும் செலவழிக்கின்றார்கள்.

11.08.2006க்குப் பின் ஏற்பட்ட நெருக்கடி சகலருக்காகவும் இருந்த போதிலும் கூட்டுறவை மட்டும் நசுக்குவதேன்? அழுத்தம் கொடுப்பதேன்? நிர்ப்பந்திப்பதேன்? அரச அதிபர் அவர்கள் ஒருவேளை நேரகாலம் பாராது கடமையாற்றக் கூடும். வேறு யார் அல்லது எந்தத் துறை, எந்தத் திணைக்களம், கூட்டுஸ்தாபனம், சபை, வங்கி மற்றும் வர்த்தக ஸ்தாபனங்கள் அத்துடன் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைத் தவிர்ந்த வேறு எந்த கூட்டுறவு அமைப்புக்கள் இப்படியான இடர்காலம் எனக் கருதி கடமை எனப் பாராது சேவை என செய்கின்றார்கள்?

*யாழ்ப்பாணம்*

*-கூட்டுறவாளன்.*

ஒருவர் கையை எதிர்பார்த்திராதே. உன் கொள்கைகளை நீயே சாதித்துக் கொள்ள முயற்சி செய்.

-சுவாமி இராமதாஸ்

வலம்புரி

## அரசு இழைக்கும் அநீதியை பார்த்திருப்பது கொடும்பாவம்

யாழ்.குடாநாட்டு மக்களின் உடல், உள நலம் நாளுக்கு நாள் மோசமாகி வருகின்றது.

பஞ்சத்தின் தாக்கமும் சிக்கின்குனியாவின் பாதிப்பும் மக்களின் ஆரோக்கியத்தை மோசமாக பாதித்து வருவதன் விளைவு மரணமாகவே அமையும்.

தமிழ் மக்களின் அவலம் கண்டும் அரசு இரங்குவதாகவில்லை. ஆளும் இனம் நாம்; ஆளப்பட வேண்டியவர்கள் தமிழர்கள் என்ற நினைப்பும் தொனிப்பும் அரசின் செயற்பாடுகளில் வெளிப்படுகின்றன.

மனித உயிரோடு விளையாடும் விளையாட்டு நாட்டிற்கும் ஆட்சியாளர்களுக்கும் அவ்வளவு நல்லதல்ல.

அஹிம்சையையும் தர்மத்தையும் போதித்த கௌதம புத்தபிரானின் கொள்கையை பின்பற்றுவோர் யாழ்.குடாநாட்டு மக்களை இத்துணை தூரம் துயரப்படுத்துவதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

இலங்கைப் பௌத்த சிங்கள நாடு என்பதை உறுதி செய்வதாகக் கருதி ஏ-9 பாதையை மூடிய செயல் அரசின் நினைப்புக்கு எதிரான விளைவையே தரும்.

ஆம், தமிழ் மக்கள் தமக்கென்றொரு நாட்டை அமைத்திருந்தால் பங்கீட்டு அட்டைகளுடன் பல மணி நேரம் காத்திருக்கும் கர்ம வினை இல்லாது போகுமல்லவா? என்ற நினைப்பே ஒட்டுமொத்த தமிழர்களிடமும் புரையோடும்.

கடந்த காலங்களில், தமிழர்களை அடக்க நினைத்ததன் விளைவையே இப்போது நாடு முழுமையாக அனுபவித்து வருகின்றது.

அடக்க முற்பட்டு எதைச் சாதிக்க முடிந்ததென்பதை ஒருகணம் சிந்தித்தாக வேண்டும்.

அந்த சிந்தனையின் ஓட்டத்தில் ஏ-9 பாதை மூடப்பட்டமையும் யாழ்.குடாநாட்டு மக்களைப் பட்டினியில் வாட்டியமையும் இன்னுமோர் போராட்ட வரலாறாக முனைப்புப் பெறும் என்ற உண்மையை உணர முடியும்.

ஒரு நாடு, ஒரு இனம், ஒரு மதம் என்ற அகங்காரத்தின் முடிபு உலகம் முழுவதிலும் ஆயுதமும் ஆயுதப் பயிற்சியும் பெறும் சூழலைக் கொண்டு வந்து விட்டது.

நாட்டின் பொருளாதாரம்-அபிவிருத்தி அனைத்தும் அதள பாதாளத்தில் படுத்துறங்குகின்றன. ஆட்சிப் பீடத்தில் இருப்பவர்கள் நாட்டின் எதிர்காலம் பற்றி எதுவும் நினையாமல் மேடை போட்டு முழங்கித் தள்ளுகின்றார்கள்.

என்ன செய்வது? இலங்கை போரினால் அழிந்து போவதுதான் நியதி என்றால் அதனை யாராலும் தடுக்க முடியாது என்பது இறைக் கொள்கை.

அதேநேரம் வரவிருக்கிற அழிவைத் தடுக்கும் சக்தியிருந்தும் அதனைச் செய்யத் தவறுவோர் அழிவின் உரித்தாளர்களாக உலகத்தால் தூற்றப்படுவர் என்ற உண்மை உணரப்பட வேண்டும்.

அத்துடன் ஆட்சியாளர்கள் செய்கின்ற அநீதியைப் பார்த்திருக்கும் பெரும்பான்மை மக்களும் பாவத்துக்கு ஆளாவதும் அந்தப் பாவம் அவர்களைத் தீண்டுவதும் தவிர்க்க முடியாததாகிவிடும்.

# ஒருவருக்கொருவர் மதிப்பளிப்பதன் மூலம் சமாதானத்தை அடைந்து கொள்ள முடியும்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழ், சிங்கள, முஸ்லிம் உட்பட அனைத்துப் பல்லின மக்களைக் கொண்டிருக்கும் எமது நாட்டினுள் ஒருவருக் கொருவர் மதிப்பளிப்பதன் மூலமாக மட்டுமே சமாதானத்தை அடைந்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை ஒட்டி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மனித இனத்தின் நன்மைக்காக வேண்டி இப்போதைக்கு 59 வருடங்களுக்கு முன்பு அனைத்து நாட்டவரும் ஒன்று சேர்ந்து டிசம்பர் மாதத்தில் 10 ஆம் திகதியை சர்வதேச மனித உரிமைக்கான தினமாகப் பிரகடனப்படுத்தி மனித இனத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர்பிலான சவாலை வெற்றி கொள்வதற்கான பிரகடனத்தை நிலைப்படுத்திய தினத்துக்காக செய்தி ஒன்றை வழங்க கிடைத்தமை மகிழ்சிக்குரிய விடயமாகும்.

மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான தேவைப்பாடு என்றுமில்லாதவாறு ஆழமாக உணரப்படும் இச் சந்தர்ப்பத்தில், இன, மத, குல வேறுபாடுகளின்றி அனைத்து மக்கள்பிரிவினரும் சுதந்திரமாக வாழக்கூடியதான உரிமையைப் பாதுகாப்பதற்காக எமது அரசாங்கம் முழுமையான அர்ப்பணிப்புடன் செயலாற்றிக் கொண்டிருப்பதை நான் இந்த விசேட தினத்தில் குறிப்பிட்டாக வேண்டும்.

மனித உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் அதற்கு மதிப்பளிப்பது மூலமாக சமாதானத்தை ஆசிக்கும் மிகவும் நல்நோக்கான சூழல் ஒன்றை நாட்டினுள் உருவாக்கக் கூடியதாகவிருக்கும் என்று நான் நம்புகின்றேன்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் உட்பட அனைத்துப் பல்லின மக்களையும் கொண்டிருக்கும் எமது நாட்டினுள் ஒருவருக்கொருவர் மதிப்பளிப்பதன் மூலமாக மட்டுமே சமாதானத்தை அடைந்து கொள்ளக் கூடியதாக இருக்கும் என்பது எனது நம்பிக்கையாகும்.

நமது சமூகத்தில் மனித உரிமைகள் பாரதூரமான முறையில் மீறப்படுவது தொடர்பில் ஆராய்ந்து பார்த்து அது தொடர்பான ஆணைக்குழு ஒன்றை நிறுவுவதற்காக எமது அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்ததுடன் ஒரு வருடமொன்றுக்குள் நடைமுறையிலிருக்கும் குறித்த ஆணைக்குழுவின் அடிப்படை நோக்கமானது குற்றவாளிகளைத் தண்டிப்பது மற்றும் எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமைகளை ஏற்படுவதைத் தடுத்து நாட்டினுள் அனைத்து இன மக்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பதாகும். (04 ஆம் பக்கம் பார்க்க)

# பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை கொழும்பில்

## மாணவர்களின் விபரம் அறிவிப்பு

பேராதனைப் பல்கலைக்கழக முதலாம் வருட கலைப் பீட வெளிவாரி மாணவர்களுக்கான பரீட்சைகள் டிசம்பர் 18 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இம்முறை இப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடாத்த முடியாமல் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் கொழும்பு அல்லது கண்டிக்கு வருமாறு பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் கிளையின் பணிப்பாளர் யாழ்.அரச அதிபர் ஊடாக அறிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகளின் பெயர்ப்பட்டியல் கொழும்பு நிலையத்தின் அடிப்படையிலும் பேராதனை நிலையத்தின் அடிப்படையிலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சார்த்திகளின் விபரம் வருமாறு,

### *கொழும்பு நிலையம்*

எஸ்.அகிலன் (சாவகச்சேரி), கே.அஜந்தினி(சங்கானை கிழக்கு), கே.ஆஞ்சனா (அச்சுவேலி), ஆர்.அனோதா (மல்லாகம்), ஆ.பகீரதா(நீராவியடி),ஜி.பகீரதி (வல்வெட்டித்துறை), பி.பாலராணி(சுழிபுரம் வடக்கு), பி.பாலசுப்பிரமணியம்(சுழிபுரம் வடக்கு), கே.பாமதி(புலோலி தெற்கு), என்.பாரதி (காரை நகர்), எம்.கௌசலா (ஆத்திசூடி வீதி),

எஸ்.கேமா (உரும்பிராய் வடக்கு), ஆர்.இந்துஜா (வைமன் றோட்), எஸ்.ஜெனனி(இணுவில் மஞ்சத்தடி), எஸ்.ஜெனிசித்திரா (திருக்குடும்பக் கன்னியர்மடம் குருநகர்), பி.ஜெசித்தா (அல்லாரை தெற்கு), என்.ஜெகவதனா (சங்கானை ), எஸ்.ஜெசந்தா (ஸ்ரான்லி வீதி), ஜெ.ஜெசிந்தா (சுன்னாகம்), எஸ்.ஜெயக்காந்தன் (சுழிபுரம்), எஸ். ஜெயந்தா (அளவெட்டி தெற்கு), பி.ஜெயப்பிரகாஷ் (தொண்டமனாறு), ரி.ஜெயதர்ஷன் (உடுவில் கிழக்கு),

கஜேஸ்வரா (சுன்னாகம்), எஸ்.கரன்(இணுவில் தெற்கு), கே.கார்த்திகா(சாவகச்சேரி), ஈ.கயல்விழி(நீர்வேலி), ரி.கேதினி (தொட்டிலடி),எஸ்.கிருபானந்தன்(உடுவில்), என்.கிருஷாந்தி(மானிப்பாய்),எஸ்.கோகிலா (மானிப்பாய்), ஆர்.கோகிலகுமார் (மானிப்பாய்), பி.கிருஷ்ணகுமார்(கரவெட்டி மத்தி), வி.குகன்(நீர்வேலி),

எஸ்.குமரகுருபரன்(உடுப்பிட்டி), ந.குமரசிவம் (சுன்னாகம்), க.குருபரன் (யாழ்ப்பாணம்), ஏ.லிங்கேஸ்வரி(நல்லூர்), ந.மலர்விழி(புலோலி), க.மங்களகௌரி(சங்கானை), ப.மங்களமாலினி (அல்வாய்), ரி.மரியநேசன்(மாதகல்),பி.மதுரா (தோப்பூர்), பி.மதுஷா (உடுவில் தெற்கு), எஸ்.மதுகீலன்(கரவெட்டி), ஆர்.மயூரன்(நீர்வேலி),

பி.நளாயினி (ஆனைக்கோட்டை), ஜே.நிசாகர்(கோப்பாய்), ந.நித்தியா(கோண்டாவில்), ச.பிரதீபன்(சுன்னாகம்), ஈ.பத்மா (அல்வாய்), ஜே.பிரதீபா (ஓட்டுமடம்), ப.பிரதீபன்(கொடிகாமம்), ந.பிரதீப்குமார்(சுழிபுரம்), எ.பிரிந்தா (புத்தூர்), ஈ.பிருந்தாபன் (தாவடி), ப.பிரியதர்ஷினி(நீர்வேலி), க.புயாங்கன்(சண்டிலிப்பாய்), க.புவனலோஜினி(உரும்பிராய்), எஸ்.ரஜிவர்மன்(புத்தூர்), ரி.ராகுலன்(வல்வெட்டித்துறை),

ந.ரஜிதா (சுன்னாகம்), எஸ்.ரசிகுமார்(புத்தூர்), க.ராதிகா (மானிப்பாய்), வை.ராதிகா (சுன்னாகம்), எஸ்.ரோகனா(வல்வெட்டித்துறை), எஸ்.சபானா(இணுவில்), ரி.சங்கீதா (வல்வெட்டித்துறை), ஆர்.சரோஜினி(புலோலி),ம.சசிகுமார்(வயாவிளான் தெற்கு), ந.சத்தியரஞ்சினி(பருத்தித்துறை), ந.சற்குணராஜா(காரைநகர்), க.செல்வரதி (புலோலி),

பி.சாந்தினி(கரவெட்டி), க.சிவரஞ்சன்(கரவெட்டி), எஸ்.சிவரூபி (காரைநகர்), ஏ.சிவச்செல்வி (அச்சுவேலி), எஸ்.சிவசங்கர்(நீராவியடி), ஜி.சியாமளா (கோப்பாய்), க.சிறிரங்கலிங்கம் (சாவகச்சேரி), ஆர்.சுபாஜினி(கைதடி வடக்கு), எஸ்.சுபாசினி (திருநெல்வேலி), ஆர்.சுபாசினி (யாழ்ப்பாணம்), ந.சுபஉமா (மானிப்பாய்), க.சுகந்தன்(ஆனைப்பந்தி), என்.சுகந்தினி (புத்தூர்), கே.சகிதா (கிளிநொச்சி), பி.சுகந்தன்(இணுவில்),

எஸ்.சஜிதா(வரணி), என்.சுகிதா (கோப்பாய்), பி.சுரேஸ்குமார்(நயினாதீவு), ஜி.சுதாகரன்(கொடிகாமம்),க.சுகந்தினி (சுழிபுரம்), எஸ்.சுதர்ஷினி(தெல்லிப்பழை), எஸ்.சுதிரதன்(சங்கத்தானை), க.சுவாமிநாதன்(புத்தூர்), எஸ்.தாட்சாயினி(உரும்பிராய்), ஆர்.தமயந்தி(செட்டிபாலயம்), ஆர்.தமிழ்ச்செல்வி (பரந்தன்), ஈ.தனுஜா (அச்சுவேலி),ஆர்.தனுஷா (ஆனைக்கோட்டை),

க.தனுஷியா (நீர்வேலி), ந.தர்ஷினி(வண்ணார்பண்ணை), எஸ்.தர்மினி(அளவெட்டி மத்தி), ஆர்.தர்ஷினி(சாவகச்சேரி), ரி.தர்ஷினி(வல்வெட்டித்துறை), க.தசிகரன்(வயாவிளான்), ரி.தவச்செல்வம்(உடுப்பிட்டி), ந.தயாளினிதேவி (தொண்டமனாறு), ஆர்.திருச்செந்தூரன்(மானிப்பாய்), கி.திவ்யா(சுன்னாகம்), க.துஷ்யந்தினி(மாதகல்) ,ரி.வனஜா (புலோலி),

பி.வர்சினி (கோண்டாவில்),ரி.வஜிகலா(மானிப்பாய்), ப.விஜிதா (மானிப்பாய்), ப.விஜிதா (புத்தூர்), எஸ்.விக்னேஸ்வரன்(நாகர்கோவில்), ஏ.விஜயராம்(பருத்தித்துறை), ரி.விஜிதா(கோண்டாவில்), க.விலாசினி(சுன்னாகம்), ஆர்.விஸ்வரூபி(மானிப்பாய்), ந.வித்தியாகரன் (கொடிகாமம்),எஸ். வித்தகன்(சுன்னாகம்), எஸ்.யசித்திரா (சுன்னாகம்),

ந.யசோதா(அச்சுவேலி) ,வை.அமுதவேணி(சுன்னாகம்), ஆர்.மேகலா (நீர்வேலி), ந.செந்தூரன்(மிருசுவில்), வை.சுபாசினி(நல்லூர்),எஸ்.சுகந்தினி(துன்னாலை வடக்கு), எஸ்.திலீபன்(ஊரெழு மேற்கு),

### *பெரதேனியா நிலையம்*

எஸ்.கனகாம்பிகை (வவுனியா), ந.குலசிங்கம்(மல்லாவி), எஸ்.லோஜினி(கிளிநொச்சி), க.மலர்விழி(யாழ்ப்பாணம்),ரி.நிரோஷ்(கோப்பாய்), ந.சிந்துஜா(கந்தர்மடம்), ரி.சிவலிங்கம் (யோகபுரம்), ரி.சிறிபிரகாஷ் (சுன்னாகம்),எஸ்.சுபாசினி(உடுப்பிட்டி), கே.பிரபாகரன்(அல்வாய் மேற்கு).

மேலதிக விபரங்களை 'வலம்புரி' அலுவலகத்தில் பார்வையிடலாம். (ஓ)

# பயங்கரவாதத் தடைச் சட்டம் அமுலானது கவலையளிக்கிறது

## கிறிஸ்தவப் பீடங்கள் அறிக்கை

பயங்கரவாதத்தைத் தடுக்கும் முகமாக அரசு புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அமுல்படுத்தியிருப்பது பெருங் கவலையளிக்கின்றது என்று கொழும்பு ஆயர் டுலிப் டி சிக்கஹார தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் ஏற்படுத்திய பாதிப்புக்கள் இன்னமும் ஆறாத காயமாக பலர் மனதில் உள்ளன. இக் கடுமையான சட்டதிட்டங்களால் தமிழ் மக்கள் மேலும் தனிமைப் படுத்தப்படுவர்.

பயங்கரவாதத்தை ஒடுக்க தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்களே போதுமானவை என்று அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார். சமாதானத்தில் கடப்பாடு கொண்டுள்ளதாகக் கூறும் அரசாங்கம் அதை நிரூபிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் பேச்சாளர் சான்டா பெர்ணாண்டோ அரசாங்கத்தின் முடிவு கடுமையானது எனக் கூறியுள்ளார். மேலும் 8 முக்கிய புரட்டஸ்தாந்து தேவாலயங்களும் இணைந்து இந்த அறிக்கையை விடுத்துள்ளன.

பயங்கரவாதத்தடைச் சட்டம் நிலைமையை மேலும் மோசமாக்கும். இது போர் நிறுத்த உடன்படிக்கையை அப்பட்டமாக மீறுவதாகும் என்று பெர்னாண்டோ கூறினார். (ச-5)

# 60 ஆயிரம் ரூபா சம்பளம் எடுத்தாலும் கஞ்சியைத்தான் குடிக்க வேண்டியுள்ளது

## யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் கொழும்பில் குமுறல்

(கொழும்பு)

குடாநாட்டில் 60 ஆயிரம் ரூபா சம்பளம் எடுத்தாலும் அங்கு கஞ்சிக்குக்கூட வழியில்லாமல் தான் இருக்கிறேன் என்று யாழ்.பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் ஒருவர் கூறுகிறார்.

குடாநாட்டிலிருந்து நேற்று முன்தினம் கொழும்புக்கு வந்த அவர் அங்குள்ள நிலைமைகள் குறித்து தனது கவலையை கொழும்பில் இருந்து வரும் வார இதழ் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் மாத்திரமே அரிசி ,மா,சீனி போன்றன விநியோகிக்கப்படுகின்றன. அவ்வாறு விநியோகிக்கப்படும் பொருட்கள் அனைவருக்கும் கிடைப்பதில்லை.

நீண்ட வரிசையில் காத்திருந்து இவற்றைப் பெறவேண்டியுள்ளது. சீரான முறையில் இந்த விநியோகம் இடம் பெறாததால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பரீட்சைக்குப் படிக்கும் மாணவர்களுக்கு போதிய உணவு இல்லை. பாடசாலையில் மயங்கி விழும் நிலையில் மாணவர்கள் உள்ளனர். டீசல் வந்தால் மட்டுமே மின்சாரம் வழங்குவார்கள். அதுவும் ஒரு சில மணித்தியாலங்கள் மட்டுமே. மின்சாரப் பிரச்சினையால் தண்ணீருக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது.

அதே நேரம் மீனவர்கள் தொழில் செய்ய முடியாதபடி தடைகள் போடப்பட்டுள்ளன. ஒரு கிலோ மீன் ஆயிரம் ரூபா வரை விற்கப்படுகிறது. நண்டு ஒன்று 200ரூபாவுக்குக் கிடைப்பது கூட அரிது. முட்டை ஒன்று 45 ரூபாவுக்கு விற்பனையாகிறது.

இதனால் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் வாழைப்பழம் ,முந்திரிகைப்பழங்களையே உணவாக உட்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களைப் பொறுத்தவரை தூர இடங்களில் இருந்து வருபவர்களுக்கு பல்கலைக்கழக சுற்றாடலில் இருப்பதற்கு இடம் இல்லை. அப்படி இருந்தாலும் அங்கு பாதுகாப்பு இல்லை.

பத்து சத வீதமான மாணவர்களுக்கே விடுதி வசதியுள்ளது. ஒரு நேர உணவுக்குக் கூட வழியில்லாத நிலையில் மக்கள் உள்ளனர். ஐந்து இட்டலி சாப்பிட 150 ரூபா செலவாகிறது.

60 ஆயிரம் ரூபா சம்பளத்தை நான் எடுத்தாலும் காலையில் கஞ்சிதான் குடிக்கிறேன். அதற்குக் கூட பெரும் தட்டுப்பாடுதான் மத்தியானத்தில் ஒரு கறியுடன்தான் சாப்பாடு. இரவில் றொட்டி. மாவுக்குத் தட்டுப்பாடு.

பாலும் இல்லை. பனடோல் ஒன்று 40 ரூபா. நுளம்புச்சுருள் இல்லை. அப்படி அரிதாகக் கிடைத்தாலும் 140 ரூபா கொடுத்துத் தான் ஒரு நுளம்புச்சுருளை பெறவேண்டியுள்ளது.

ஏ-9 வீதியை திறக்காமல் இந்தப் பிரச்சினைக்கு தீர்வைக் காண முடியாது. ஏன் எனில் எவ்வளவு பொருட்கள் வந்தாலும் அவை மக்களுக்கு கிடைப்பதில்லை.

ஆனாலும் தமது கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக சாப்பிடாவிட்டாலும் சாப்பிட்டோம் என்றுதான் அங்குள்ளவர்கள் கூறுகின்றனர் என அவர் தனது குமுறலை வெளிப்படுத்தினார். (ச)

## 26 இலட்சம் ரூபாவை மீளப் பெற்ற தமிழ்ப்பெண் கைது

மொறட்டுவையில் தனியார் வங்கி ஒன்றில் தமிழ்ப் பெண்மணி ஒருவர் ஒரே நேரத்தில் 26 இலட்சம் ரூபாவை தம் வங்கிக் கணக்கில் இருந்து மீளப்பெற்றுக் கொண்டமை குறித்து சந்தேகமடைந்த கல்கிசை குற்றப்புலனாய்வுப் பொலிஸார் அவரைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்தி வருகின்றனர்.வெள்ளிக்கிழமை வங்கிக்குச் சென்ற அப் பெண்மணி தன் வங்கிக் கணக்கில் இருந்து ஒரே நேரத்தில் 26 இலட்சம் ரூபா பணத்தை மீளப் பெற்றுள்ளார்.

இது வங்கியில் உள்ளவர்களுக்கு சந்தேகத்தை அளிக்கவே அவர்கள் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.இதனையடுத்து கல்கிசை குற்றப் புலனாய்வுப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இப் பெண்ணைக் கைதுசெய்து விசாரணை செய்தபோது தமக்கு வேறு வங்கிகளில் கணக்குகள் இல்லையெனத் தெரிவித்துள்ளார். என்றாலும் பொலிஸாரின் விசாரணை யின் போது இப் பெண்மணி வேறு ஐந்து வங்கிகளில் ஏழு கணக்குகள் வைத்திருப்பது தெரிய வந்துள்ளது. (ச-5)

# கவலை தெரிவிப்பதோடு நின்றுவிடாது இந்தியா ஆலோசனை வழங்க வேண்டும்

## தினமணி ஆசிரியர் தலைப்பில் தெரிவிப்பு

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தொலை தூரத்தில் உள்ள நோர்வே முயற்சித்துவரும் போது அண்டை நாடான இந்தியா வன்முறைகள் ஏற்படும் போது வெறும் கவலையைத் தெரிவிப்பதோடு மட்டும் நின்று விடக்கூடாது என தமிழகத்தில் இருந்து வெளியாகும் தினமணி நாளிதழின் நேற்றைய ஆசிரியர் தலைப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இனப் பிரச்சினை தீர என்று தலைப்பிட்டு எழுதப்பட்டிருக்கும் அந்த ஆசிரியர் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு;

இலங்கையில் இனமோதல்கள் தொடர்ந்து வரும் சூழ்நிலையில் அதை முடிவுக்குக் கொண்டுவர மத்திய அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று கோரும் தீர்மானம் தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழ் மக்களின் உடல் உடைமைகளுக்கு பாதுகாப்பு இல்லாத மோசமான சூழ்நிலை தொடர்வதற்காக ஆழ்ந்த வருத்தம் தெரிவிப்பதோடு இதற்கு முடிவு காண முடியாது.

வெளிநாட்டு மத்தியஸ்தர்கள் மூலமும் தொடர்ந்து சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் நிலைமை மேம்பட்டதாக தெரியவில்லை. அண்மையில் பாதுகாப்பு செயலரைக் கொலை செய்ய நடந்த முயற்சியை அடுத்து பயங்கரவாதிகளை ஒடுக்குவதற்கான சட்டத்தை கடுமையாக அமுல்படுத்தப் போவதாக அரசு அறிவித்துள்ளது.

இந்த சூழ்நிலையில் திருகோணமலையில் ஒரு பள்ளி மீது நடந்த பீரங்கித் தாக்குதலில் ஆசிரியர் மற்றும் பத்து பள்ளிக் குழந்தைகள் காயமடைந்துள்ளனர். மக்களைக் கேடயமாக பயன்படுத்தி புலிகள் தாக்குவதாகவும் இதன் மூலம் அரசு படையை பதிலடிக்குத் தூண்டி விட்டு பழியையவர்கள் மீது சுமத்துவதே போராளிகளின் நோக்கம் என்று இராணுவம் கூறுகிறது என அதன் ஆசிரியர் தலைப்பில் கூறப்பட்டுள்ளது. (ச)

## ஒருவருக்கொருவர் மதிப்பளிப்பதன்...

மேலும் கடந்த காலங்களில் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் நிலவிய மோதல் சூழ்நிலையில் எதிரில் பாதிப்புக்குள்ளான மக்களின் மனித உரிமைகளை பாதுகாப்பது தொடர்பில் சர்வதேச சமூகம் மற்றும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து நாம் பெரும் பங்காற்றியிருக்கின்றோம்.முழு உலகத்திற்கும் எதிரான மோசமான அனுபவமான பயங்கரவாதத்தை கட்டுப்படுத்த புதிய சட்டங்களை பிரகடனப்படுத்தி பயங்கரவாதத்தில் இருந்து ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காகவும் அனைத்து இன மக்களும் சுதந்திரமாக உரிமைகளை உறுதிப்படுத்தவும் நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

1987 ,1989 காலப் பகுதியில் நாட்டினுள் நிலவிய பயங்கரவாத சூழலில் கூட மனித உரிமைகள் கடுமையான முறையில் பாதிக்கப்படுவதை தடுப்பதற்கு எதிரான சர்வதேச சமூகத்தினர் முன்பாக குரல் எழுப்பிய நான் இன்றைய நாளிலும் எமது நாட்டு மக்களினதும் மட்டுமன்றி முழு உலகில் வாழும் மக்களினதும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளுக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றி கொண்டிருப்பதையும் குறிப்பிட்டுக்கொள்ள விரும்புகின்றேன.

இன்றைய தினம் பிரகடனப்படுத்தப் பட்டுள்ள சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மற்றும் அதன் மேம்பாட்டுக்கும் பாடுபட முன்வருமாறு நான் இலங்கை மக்கள் அனைவரிடமும் வேண்டிக் கொள்கின்றேன்.

எமது ஜனநாயகத்தின் பெறுமதிகளை வலுப்படுத்தக்கூடியதாக இருக்கக்கூடும் என்பதுடன் நீடுறுதியான நிலையான சமாதானத்தை நாட்டினுள் ஏற்படுத்தி அனைவருக்கும் நன்மை பயக்கும் சமூக அமைப்பொன்றை கட்டியெழுப்பவும் முடியுமாக இருக்கும். (ச)

## அரசாங்கத்தின் யோசனைகளுக்கு...

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன்ஹான்சன் பௌயர் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்பிறட்ஸ்கருடன் இடம் பெற்ற சந்திப்பின் போதே பாலித கோஹன்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அரசாங்க சமாதான செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; யாழ்ப்பாணத்தில் தற்போது 4 ஆயிரம் தனியார் வர்த்தகர்கள் உள்ளனர். இவர்கள் வர்த்தக நடவடிக்கைகளில் எவ்வித அச்சுறுத்தலும் இன்றி ஈடுபட விடுதலைப்புலிகள் அனுமதிக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்திற்குத் தேவையான அவசர நிவாரணப் பொருட்களை ஓமந்தையில் இருந்து முகமாலையூடாக கொண்டுசெல்வது தொடர்பில் அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகள் தொடர்பாக உடனடியாக பதிலளிக்க வேண்டும்.

இதற்குத் தேவையான வாகனங்களையும் ஏனைய வசதிகளையும் செய்ய அரசாங்கம் தயாராகவுள்ளது. இவ் விநியோகத்திற்காக பாதுகாப்பு உத்தரவாதத்தை விடுதலைப் புலிகள் வழங்க வேண்டும்.

இது தொடர்பில் அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் தயாராகவுள்ளது. (ச-5)

## வாகரை நோக்கி ஷெல் தாக்குதல்...

வாகரைப் பகுதி நோக்கி படையினர் நேற்று நடத்திய எறிகணைத் தாக்குதலில் நான்கு வயதுக்குழந்தை உட்பட 15 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 35 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் முதல் கல்லாறு ,வாழைச்சேனை மற்றும் கரடிக்குளம் முகாம்களில் இருந்து தொடராக வாகரைப் பகுதி நோக்கி எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, நேற்று முன்தினம் இரவு வெருகல் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் பெண் ஒருவர் உட்பட மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

அத்துடன் வாகரைப் பகுதி மக்கள் குடியிருப்புக்களை இலக்குவைத்து நேற்று முற்பகல் விமானங்கள் குண்டு வீசியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மக்களின் நலன்புரி நிலையங்களை இலக்குவைத்து தொடர்ந்தும் படையினரால் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையால் இடம் பெயர்ந்து வாழ்கின்ற மக்கள் தொடர்ந்தும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

இன்றைய தாக்குதலில் காயமடைந்த 35 பேரை மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு மருத்துமனைக்கு கொண்டு செல்வதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் தொடர்பு கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வாகரை மருத்துமனைப் பொறுப்பதிகாரி காயமடைந்தவர்களை கொண்டு செல்ல பாதையைத் திறந்து விடுமாறு பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி கோரிய போதும் பாதுகாப்பு அமைச்சு அதனை மறுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

முடிந்தால் காயமடைந்தவர்களை கடல் வழியாக கொண்டு வருமாறு படைத்தரப்பு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்குத் தெரிவித்ததாகவும் ஆனால் கடலில் எறிகணைகள் வீழ்ந்து வெடிப்பதாலும் கடற்படையினரின் பீரங்கிப் படகுகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாலும் இது சாத்தியப்படவில்லை என்று வாகரை மருத்துமனை வட்டாரத்தினர் தெரிவித்துள்ளனர். (ச)

## திருகோணமலை...

இ.இளந்திரையன் தெரிவித்தார்.

இதில் படைத்தரப்பில் இரண்டு அதிகாரிகள் உட்பட 30 இற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதுடன் 100 இற்கும் மேற்பட்ட படையினர் காயமடைந்துள்ளனர்.

படையினரின் ஐந்து சடலங்களும் ஆயுதங்களும் விடுதலைப்புலிகளினால் மீட்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இம் முறியடிப்புத் தாக்குதலில் தமது தரப்பில் ஏழு பேர் காயமடைந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் பதிலுக்கு இராணுவம் தாக்கியதாகவும் இராணுவத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன. இதில் விடுதலைப்புலிகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-1)

## இந்தியாவில்...

இந்த கப்பல் காங்கேசன் துறை துறைமுகத்தை வந்தடையுமென அரசாங்கத் தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன. அப்பொருட்கள் வந்தடைந்ததும் உடனடியாக விநியோக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ச)

## காயமடைந்த...

சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தார். கொழும்பு கொள் ளுப் பிட்டி பிந்தல சந்தியில் இடம் பெற்ற இக் குண்டுத் தாக்குதலில் இதுவரை நான்கு பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக் கது. (ச-133)

## இலங்கைக்கு...

தற்போது முதல்வர் கருணாநிதி புதுடில்லியில் உள்ளார். இந்த வெடிபொருள் விவகாரம் குறித்து உடனடியாக தீவிர விசாரணை மேற்கொள்ளும்படி அவர் தமிழகப் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார் என தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (எ-5)

## மோதல்களை...

கூறினார். செருகம பிரதேசங்களில் மோதல்கள் இடம் பெறுவதாக தகவல்கிடைத்துள்ளன.

இதனையடுத்து தாம் அங்கு செல்ல முயற்சிகளை மேற்கொண்ட போதும் இரண்டு தரப்பினருக்குமிடையில் இடம்பெறும் மோதல்கள் இவற்றுக்குத் தடையாகவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (எ-133)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.12.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.